தேதி.20.09.2024

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No**.413/2018 திரு. சூர்யா ம.சா. 1

**ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் நான் விபத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். விபத்து பற்றி யார் தகவல் சொன்னார் என்றால் யார் என்ன என்பது பற்றி தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். விபத்து சம்பந்தப்பட்ட ஆட்டோ எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் கணவருக்கு பாத்தியப்பட்டது. தாக்கல் செய்துள்ள மனுவின் சட்டப்பிரிவுகளின் படி எனக்கு அறுகதையில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது எனது கணவரின் ஓட்டிச்சென்றபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் வேலையாள் இழப்பீட்டுச்சட்டப்படியும், மோட்டார் வாகன இழப்பீட்டு சட்டப்பிரிவு 363ன் படி தான் பரிகாரம் கோர முடியும் என்றால் சரியல்ல. விபத்தில் திடீரென ஒரு வாகனம் வந்தால் அந்த வாகனத்தில் மோதாமல் இருக்க பிரேக் போட்டதானால் கவிழ்ந்து விட்டதுஎன்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து தவிர்க்க முடியாத விபத்து என்று சொன்னால் சரியல்ல. வாகனத்திற்கு காப்பீடு எனது கணவர் பெயரில் எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அவ்வாறு எடுக்கப்பட்ட காப்பீடு 3ம் நபருக்கான காப்பீடு மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால் வாகனத்தின் உரிமையாளரோ அல்லது வாகனத்தின் ஓட்டுநருக்கோ இந்த காப்பீட்டு பிரிமியத் தொகை செலுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எதேனும் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் எனில் No Fault Liability ன் படி வழங்கவேண்டும்

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.20.09.2024

என்றால் சரியல்ல. எனது கணவரின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு ஆண் இருந்தார். அவர் எனது கணவர் இந்த பின் இறந்துவிட்டார். 4, 5ம் மனுதாரர் எனது மாமியார், மாமனார் என்றால் ஆமாம். 4,5 மனுதாரர்கள் தனிக்குடித்தனமாக உள்ளார்கள். எனது மாமனாருக்கு என்ன வேலை செய்கிறார்கள் என்றால் கூலிவேலை தான் சென்று கொண்டிருக்கிறார்கள். 4,5 மனுதாரர்கள் எனது கணவரின் வருமானத்தை சார்ந்ததிருந்தார்கள் என்று மனுவிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை. எனது மகள்கள் படிக்கிறார்கள். இந்த ஆட்டோவில் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதற்காக வரவு செலவு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அவர் அதன் மூலம் மாதம் எவ்வளவு வருமானம் வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத்தொகை மிகவும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.20.09.2024